T.C: 043

018/DD/21

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours　　　　Maximum Marks : 100

அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

**I.** (அ) சரியான விடையைப் பொருத்தி காட்டுக : (5 × 1 = 5)

1. திருந்துற நோக்கல் வருக என உரைத்தல் – பரஞ்சோதிமுனிவர்
2. பொறி இன்மையார்க்கும் பழி அன்று – அதிவீரராம பாண்டியன்
3. நீ ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே – வீரமாமுனிவர்
4. புண்ணிய சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை அன்றோ – குலசேகராழ்வார்
5. உய்முறை அறியேன் – திருவள்ளுவர்

(ஆ) பொருத்துக : (5 × 1 = 5)

| நூல்கள் | | ஆசிரியர் பெயர்கள் |
|---|---|---|
| 1. முல்லைப் பாட்டு | – | பெருங்கௌசிகனார் |
| 2. மலைபடுகடாம் | – | நப்பூதனார் |
| 3. காசிக் காண்டம் | – | குமரகுருபரர் |
| 4. முத்துக்குமார சுவாதி பிள்ளைத்தமிழ் | – | வீரமாமுனிவர் |
| 5. தேம்பாவணி | – | அதிவீரராம பாண்டியர் |

**II.** பின்வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக : (5 × 1 = 5)

1. தோணி
2. எழுகதிர்
3. சமூக அக்கறை
4. சொற்பொழிவு
5. மனச்சுமை.

[Turn over

**III.** பின்வரும் பகுதியிலுள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : (5)

உடம்பு முலுக்கத் தூசியும் விறித்த கருமையான தளை முடியும் கையிள் சிலம்போடு வந்த தோர்ரமும் அவளது கன்னீரும் கண்ட அலவிலேயே வையை நதி பாயும் கூடள் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான்.

**IV.** கீழ்வரும் பகுதிகளைப் பல வடிவங்களாக எழுதுக : (5 × 2 = 10)

1. காண்
2. சிரி
3. அமர்
4. எழு
5. வா

**V.** கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக : (5 × 1 = 5)

1. முறையான தொடராக்குக.

   தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இட முண்டு

2. வழா நிலை தொடராக்குக.

   நேற்று வருவான்

3. மரபு பிழையை நீக்குக.

   தென்னந் தோட்டம் அழகாக உள்ளது.

4. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.

   கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தன.

5. சந்திப் பிழைகளை நீக்குக.

   அந்த சிறுமி விளையாட்டு சாமான்களை மேரியிடமிருந்து பிடுங்கினாள்.

**VI.** வாக்கிய மாற்றம் செய்க : (5 × 1 = 5)

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

   – தொடரிலுள்ள எழுவாயை செழுமை செய்க.

2. மலர் உண்டு பெயரும் உண்டு

   – ஒரு தொடராக்குக.

3. மலை–மாலை

– இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

4. சிலை மேல் எழுத்து போல

– உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

5. சிரித்துப் பேசினார்

– அடுக்குத் தொடராக்குக.

**VII.** பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடை தருக : (1 × 10 = 10)

குறிப்பு : தேவையான இடங்களில் XXXX, YYYY, ZZZZ என்னும் குறியீடுகளைப் பயன்படுத்தவும்

1. உணவு விடுதியில் உணவு தரமற்றதாக இருந்தது குறித்து உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

2. 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற தோழனுக்கு கடிதம் எழுதுக.

3. பள்ளி இலக்கிய மன்ற விழா விருந்தினருக்கு நன்றியுரை எழுதுக.

**VIII.** பின்வரும் உரைநடை பகுதியைக் கருத்து சிதையாமல் மூன்றில் ஒரு பங்காக சுருக்கி வரைக. (1 × 10 = 10)

பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம் வரை சுவைத்தவள் நான், அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை , அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகு முன் கைநிறைய அள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன் பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்த சோறு நீரில் ஊறும் விடிந்த இந்த காலையில் அதன் பெயர் பழையசோறு அல்லது பழையது காத்திருந்து, சின்ன வெங்காயம் பச்சை மிளகாய் கடித்து நீராகாரம் போல் குடிப்பது ஒருவகை : வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்த்து கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை சுண்ட வைத்த முதல் நாள் குழம்பு இன்னும் உச்சம் ! நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு அது கிராமத்து உன்னதம்.

**IX.** பின்வரும் தலைப்புகளில் இரண்டனுக்கு ஒவ்வொன்றிற்கும் 400 சொற்களுக்கு (இரண்டு பக்கங்கள்) குறையாமல் கட்டுரை வரைக. (2 × 10 = 20)

1. (அ) சான்றோர் வளர்த்த தமிழ்.

(அல்லது)

(ஆ) சித்த மருத்துவம்.

2. (அ) கணினிகளின் வளர்ச்சியும் மின்னணுப் புரட்சியும்.

(அல்லது)

(ஆ) நெகிழிப் பைகளின் தீமைகள்.

**X.** பின்வரும் பகுதியைப் படித்துப் பொருளுணர்ந்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடைகளைத் தேர்ந்து எழுதுக. (10 × 2 = 20)

தப்பு என்ற தோற் கருவியை இசைத்துக் கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகின்றது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகின்றது. தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி கோவில் திருவிழா, திருமணம், இறப்பு , விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகின்றது. 'தப் தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது. இதனைப் 'பறை' என்றும் அழைப்பர். ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக் கருவி பறை, தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம் பெறுகிறது. நிகழ்கலைகளில் ஒன்றான தப்பாட்டம் சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறாக விளங்குகின்றது.

வினாக்கள் :

1. தப்பாட்டம் என்றால் என்ன?
2. தப்பாட்டம் முதலில் யார் மட்டும் ஆடினர்?
3. தற்போது யாராலும் ஆடப்படுகின்றது?
4. தப்பாட்டம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகின்றது?
5. தப்பாட்டம் எப்படிபட்ட கருவி?
6. தப்பாட்டம் எங்கெல்லாம் ஆடப்படுகின்றது?
7. 'தப்பு' என ஏன் அழைக்கப்படுகின்றது?
8. 'பறைதல்' என்பதன் பொருள் யாது?
9. தொல்காப்பியத்தில் எங்கு பறை பற்றி கூறப்பட்டுள்ளது?
10. தப்பாட்டம் எவ்வகை கலை?

---